1970 மார்ச் 14]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஏறத்தாழ மூன்று மாதங்களாக நடக்கிறது. மிக விரைவில் நடைமுறைக்கு வரும்.

கால்நடை வளர்ப்புத் திட்டங்கள்.

* 378 வினு—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கால்நடைப் பராமரிப்புத் துறையின் திட்டங்களை மக்களுக்குப் புரியவைக்க சினிமா படங்கள், போஸ்டர்கள் மூலம் விளம்பரப் படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திரைப்படங்கள், சுவரொட்டிகள் முதலியவற்றின் மூலமாகக் கால்நடை வளர்ப்புத் திட்டங்கள் இம் மாநிலத்தில் ஏற்கெனவே பிரபலப்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இப்பொழுது 'ஒயிட் லெக் ஹார்ன்', 'சீமைப் பன்றிகள்' போன்றவற்றை வளர்ப்பது பற்றிய தகவல்களைக் கிராம மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. விளக்கம் தர சினிமா படங்கள் அந்த வகையில் அமைக்கப் பட்டால், கிராம மக்கள் புரிந்து கொள்ள சௌகரியமாக இருக்கும். ஆதலால் அதைப் பரிசீலிக்குமா அரசாங்கம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் அதைத்தான் குறிப்பிட்டேன். அரசாங்கத்தின் சார்பில் 23 ஆங்கிலப் படங்களும், 15 தமிழ்ப் படங்களும் கால்நடை வளர்ப்பு பற்றித் தயாரிக்கப்பட்டு, சென்னையிலும் மாவட்டங்களிலும், பொருட் காட்சிகளிலும், கருத்து அரங்குகளிலும் திரையிடப்பட்டு கின்றன. வேறு வழியில்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கால்நடைக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அரசாங்க உதவியுடன் செயல் படவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அது நிறுத்தப்பட்டுவிட்டது. உடனடியாக அதை மறுபடியும் ஏற்பாடு செய்யமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேள்வி, திரைப்படம் பற்றியது. கால்நடை வளர்ப்பு பற்றியது அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பெல்லி கவுடர் . . .

சில உறுப்பினர்கள் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உறுப்பினர் பெயர் 'கருணாநாதன்' என்று மாற்றியாகிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி.

திரு. சோ. கருணாநாதன்: தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் கால்நடைப் பராமரிப்பு விவரம் அடங்கிய நூல்களைக் கால்நடை வைத்திருப்பவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப் படுமா?

(பதில் இல்லை)

Building for Arkonam Municipal Office

*379 Q. THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether the Public Works Department has undertaken the construction of the Office Buildings for the Arakonam Municipality; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) & (இ) அரக்கோணம் நகராட்சிக்கான கட்டடம் இன்னும் தொடங்கப் படவில்லை. ஆனால் அதற்குரிய வரைபடமும், மதிப்பிட்ட அளவுகளும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அலுவலகத்தில் தயாரிப்பில் உள்ளது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவர் அவர்களே, இந்த ஆபீஸ் கட்டட வேலைகள் முடிந்து விட்டனவா? ஆபீஸ் வைக்க வேண்டிய நிலையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, கட்டடத்திற்கான வேலைகளை தொடங்கவில்லை என்று பதிலிறுத் தேன். நகராட்சி மன்றத்தில் ரூ. 3,80,000 மதிப்பீட்டுச் செலவில் கட்டடம் கட்டுவதற்கான ஒரு திட்டத்தை வைத்தார்கள். அதற்குப் பிற்கு 19-12-1969 அன்று தீர்மானத்தில், இந்தத் தொகை அதிகமாக இருப்பதால், நகராட்சி மன்றம், ரூ 2 லட்சம் அளவில் திட்டம் தயாரித்தது. அது கட்டடப் பொறியாளரின் பரிசீலனையில் இருக்கிறது. இந்த நிலையில் நகராட்சியில் 3.44 லட்சம் ரூபாய் பற்றாக்குறை இருப்பதால், மூலதனச் செலவைக் குறைக்க ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. கட்டட வரை படங்கள் வந்த பிறகு அரசு ஆணை பிறப்பிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, அரக்கோணம் நகராட்சிக்கு அலுவலகம் கட்டுவது பற்றியது. அதுபற்றித் துணைக் கேள்வி கேட்கவேண்டும், திரு. நரசிம்மன்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: தலைவர் அவர்களே, நகராட்சி அலு வலகக் கட்டடம் கட்டுவதற்கு அரசாங்கம் திட்டத்தை ஏற்று, அதைப் பொது பணித்துறை ஏற்று நிறைவேற்றும்போது, அதற்குப் பொதுப்பணித் துறை ஸெண்டேஜ் போடுகிறார்கள். அதைத் தவிர்த்து, அந்தத் திட்டத்திற்காக ஆகும் நிகரச் செலவை மட்டும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.